# அகப்பொருள் வளர்ச்சியில் மாணிக்கவாசகரின் பங்கு

**முனைவர் கு.நீதா**
நெறியாளர், தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலெட்சுமி கல்லூரி
தூத்துக்குடி

**இரா.வரலெஷ்மி**
ஆய்வாளர், தமிழ்த்துறை
ஏ.பி.சி. மகாலெட்சுமி கல்லூரி
தூத்துக்குடி

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

தொல்காப்பியரால் நெறி வகுக்கப்பட்டு, சங்கப் பாடல்களில் பெரிதும் போற்றப்பட்டது அகமரபு என்னும் காதல் பாட்டு மரபு. இந்த மரபு தொல்காப்பியத்திலேயே தமிழினம் வாழ்வியல் நெறியிலிருந்து கண்ட இலக்கிய மரபாகும். உயர்ந்த அன்பு நிலையை விளக்குவதற்கு அகத்துறைகளைவிடச் சிறந்த வழி வேறில்லை. கடவுளிடம் அன்புகொண்ட அடியார்களும், கடவுளையும் தம்மையும் தலைவன் தலைவியர்களாகக்கொண்டு பக்தி வெள்ளத்தில் களிப்போராயினர். சங்க கால மரபினை ஒட்டி ஆழ்வார்களும், நாயன்மார்களும் அகத்துறைப் பாடல்களை எடுத்தாண்டனர்.

அகப்பொருள் உள்ளமும், உடலும் சார்ந்ததாக இருக்க பக்தி இலக்கியம் உயிர் சார்ந்ததாக அமைகின்றது. முதல், கரு, உரி என்ற முப்பொருள் பக்தி இலக்கியங்களில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்றாகிறது. இறைவனை அடைய இல்வாழ்க்கை தடையாய் அமையும் என்ற கருத்து நிலவிவந்த வேளையில் இல்வாழ்க்கையில் இருந்துகொண்டே இறைவனை அடையலாம் என்ற கோட்பாட்டினைச் சைவ, வைணவ இலக்கியங்கள் வலியுறுத்தின. சிற்றின்பத்திற்கு மட்டுமின்றிப் பேரின்பக் கடலில் இறங்குவதற்கும் அகத்துறைகள் உரிமை பூண்டுத்திகழ்வதாக அமைந்தன. இத்தகைய அகப்பொருள் வளர்ச்சியில் சைவ சமயக் குரவரான மாணிக்கவாசகரின் பங்கு குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

## படைப்புகளில் படைப்பாளன்

மனிதன் ஒரு சமூக விலங்கு. மனிதனின் நடத்தைகள் அவனாலே நிர்ணயம் செய்யப்படுகின்றன. காலச்சூழ்நிலைக்கேற்பவும், தம்முடன் வாழக்கூடிய மக்களின் பண்பாட்டிற்கேற்பவும் மனிதனின் சிந்தனை உருவாகின்றன. சிந்திக்கும் மனிதன் தான் அறிந்ததற்கேற்பவும், விருப்பத்திற்கேற்பவும் தன் எண்ணங்கள் வெளிப்படுத்துவான்.

அவ்வாறு வெளிப்படுத்துபவன் படைப்பாளனாகவும், வெளிப்படுத்தும் கருவி இலக்கியமாகவும் அமைகின்றன.

மாணிக்கவாசகர் இறைவன் அருள் கிடைத்தும், கிடைக்காத மன வேதனையின் வெளிப்பாடாக எட்டாம் திருமுறை நூல்களைப் படைத்துள்ளார். உலகியல் வாழ்க்கை, அருளியல் வேட்கை என்னும் இரண்டு வாழ்க்கையில் அருளியல் வேட்கை என்னும் இரண்டு வாழ்க்கையில் அருளியல்மீது ஏற்பட்ட வேட்கையினை உலக வாழ்க்கையின் வழி அடையும் எண்ணத்தை விதைக்கிறார்.

## படைப்பாக்க உத்திகள்

படைப்பாளனின் படைப்பாற்றலும், தனித்தன்மையும், படைப்பில் வெளிப்படுவதற்கு அவன் கையாளும் படைப்பாக்க உத்தி முக்கியக் காரணமாக அமைகிறது.

**'ஒத்த காட்சி உத்தி வகை விரிப்பின்''** **(தொல்.மரபு.நூ.112)**

என்னும் தொல்காப்பிய நூற்பா படைப்பிற்குரிய உத்திகளைத் தெளிவாக எடுத்தியம்புகின்றன.

'ஒரு கலைஞன் தன் துறையின் செவ்விய வெளியீட்டிற்குப் பயன்கொள்ளும் ஆற்றலும், ஆக்க முறையும் உத்தி எனப்படுகிறது'' என்று செ.சாரதாம்பாள் கூறுகிறார். மாணிக்கவாசகர் தம்முடைய படைப்புகளில் நாயக நாயகி பாவம் அமைத்துப் பாடுதல், அகத்துறையை அமைத்துப் பாடுதல், பெண்களின் விளையாட்டு, உரையாடல் தன்மை, பழமொழி, புராணக்கூறுகள், அணிகள், உள்ளுறை, இறைச்சி போன்றவற்றைப் பயன்படுத்தி அகப்பொருளை எடுத்தியம்பியுள்ளார்.

## நாயக-நாயகி பாவம்

இறைவன் முன்பு ஆணும் பெண்ணும் சமம். இறைவன் மட்டுமே ஆணாகவும், மற்ற எல்லா உயிரினங்களும் பெண்ணாகவும் பாவிக்கப்படுவது வைணவக் கோட்பாடாகும். இறைவன்மீது கொண்ட அன்பினையும், காதலையும் புலப்படுத்துவதற்கு அடியார்கள் தன்னை நாயகியாகவும், இறைவனை நாயகனாகவும் பாவித்து அகத்திணைக் குறிப்புகள் தோன்றப் பாடினர். இறைவனாகிய தலைவனுக்கும், தலைவியாகிய பக்தனுக்கும் உள்ள நெருக்கமான தொடர்பே பக்திப் பாடல்களின் அடிப்படைப் பண்பாக அமைகிறது. தன் ஆழ்மனத்தின் நிறைவு பெறாத ஆசையை நாயக நாயகி அமையப்பாடி மாணிக்கவாசகர் வெளிப்படுத்துகிறார்.

இறைவன் மேலுள்ள அதிக அன்பின் காரணமாக இறையடியார்கள் நாயகியாகத் தன்னை மாற்றிக்கொள்ளும் தன்மையை மாணிக்கவாசகர் எடுத்துரைப்பதாக,

**'சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன் திரள்தோள்**
**கூடுவேன் கூடிமுயங்கி மயங்கி நின்று**
**ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்**
**தேடுவேன் தேடிச் சிவன் கழலே சிந்திப்பேன்''**

**(திருவாசகம்,திருவம்மானை,பா.7)**

எனச் சிவனின் கொன்றை மாலையைச் சூடியும், திண்மையான தோள்களைக் கூடியும் இன்புறுவேன். தலைவனுடன் இரண்டறக் கலந்த பின் அவனிடம் ஊடல் கொள்வேன். உலகியல் இன்பத்தைப் பெற்ற உயிர் அருளியல் இன்பத்தைப் பெற அவனை என் சிந்தனையில் இருத்தி தெளிவேன் என இறைவனிடம் தான் கொண்ட காதல் நிலையை உரைக்கிறார். தலைமக்களின் உள்ளம் அன்பு பரிமாறிய நிலையை,

**'தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்**
**சங்கரா வார்கொலோ''** **(மேலது,கோயில் திருப்பதிகம்,பா.10)**

என்பது காதலின் உச்சநிலையாகும்.

**'எண்ணியர் முலை ஆகம் அளத்துடன் இன்புறுமாகாதே''**

**(மேலது,திருப்படையாச்சி,பா.4)**

எனத் தலைவி தலைவன் அன்பு கிடைக்கப்பெற்றால் என்னுடைய மார்பகம், அவன் மார்பில் தோயப் பெறுதலும் இன்பம் எனக் கூறுகிறார்.

**‘ஒத்தீரங் கொடியி னொதுங்குகின் றாள்மருங் குல்நெருங்கப்**
**பித்தீர் பணைமுலை காளென்னுக் கின்னும் பெருக்கின்றதே”**

**(திருக்கோவையார்,பகற்குறி,பா.121)**

என்று தலைவனுடன் கொள்ளும் இன்பநுகர்வுக்கு காரணமாக இருக்கும் மார்பிடம் பேசுவதாக அமைவது சிந்தனை முழுவதும் தலைவனுடன் கூடும் எண்ணத்தின் பிரதிபலிப்பைப் புலப்படுத்துகிறது.

இறைவனிடம் கூடுவதும் பின்னர் ஊடுவதும் அவன் இன்பத்தில் மகிழ்வதுமாய் இருக்கிறாய்.

**‘மலரைப் பொறாவடி மானும் தமியண்மன் னன்னொருவன் பலரைப்**
**பொறாதென் றிழிந்துநின் றாள்பள்ளி காமனெய்த அலரைப்**
**பொறாதன் றழல்விழித் தோனம் பலம்வணங்காக் கலரைப்**
**பொறாச்சிறி யாளென்னை கொல்லோ கருதியதே”**

**(திருக்கோவையார்,பா.367)**

என்னும் பாடலில் தலைவனுடன் புலவி தீர்ந்து கூடிய தலைவி, பின்னுமொரு குறிப்பு வேறுபாடு கண்டு மீண்டும் ஊடல் கொள்ளும் நிலையை உணரமுடிகிறது. தலைவனைக் கூடி இன்புற்று மயங்கியும், மயக்கத்தால் ஊடல் கொள்வதுமாகிய தலைவியின் இயல்பினைத் தெளிவுப்படுத்துவதாக அமைகிறது.

மாணிக்கவாசகர் இறைவன்மீது கொண்ட அன்பினையும், காதலையும் வெளிப்படுத்த நாயகி நாயக பாவம் சிறந்ததொரு உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார். இவ்வன்பு பாராட்டலே காதலாகிக் கசிந்து கண்ணீர் ததும்பி, பரவச நிலையில் இறைவனைக் கூடிக்களித்து உயிர் ஏங்கும் நிலையில் அகக் கவிதையாகப் படைத்துள்ள மாணிக்கவாசகரின் படைப்புத்திறன் போற்றுதற்குரியதாக அமைந்துள்ளது.

## அகத்துறைப் பாக்களைக் கையாளல்

வாழ்வியலை இயக்கும் ஆற்றல் சமுதாயத்திடம்தான் உள்ளது. தனிமனிதர்கள் சேர்ந்திருப்பது குடும்பமாகவும், பல குடும்பங்கள் சேர்ந்து வாழ்வது சமுதாயமாகவும் உருவாகின்றன. குடும்பமின்றி சமுதாய அமைப்போ, பண்பாட்டு வளர்ச்சியோ அமைவதில்லை. இயற்கை நெறியின் ஒரு பகுதியான உலகியற் காதல் இல்லையெனின் குடும்ப அமைப்பில்லை. ஆகவே பக்திப்பனுவல்களைப் பாடிய புலவர்கள் இயல்பாக எழும் காதல் உணர்ச்சிகளைக் கடவுள் பெயரில் வெளியிடலாயினர். பக்தி காதலைப் பாட அகத்துறைப் பாக்களை கையாண்டனர். மாணிக்கவாசகரும் மனித உணர்ச்சியின் பிழிவாக அமைந்திருக்கும் அகத்துறைப் பாடல்களை எடுத்தாண்டுள்ளதைக் காணமுடிகிறது.

‘ஓர் ஆண் அல்லது பெண்ணினுடைய மன உணர்வுகளைப் பற்றியும், காதல் உணர்வுகளைப் பற்றியும், அவர்கள் காதல் செய்து பின்னர்த் திருமணம் புரிந்து வீடும் நாடும் போற்ற வாழும் நிலை பற்றியும் விளக்கிக் கூறும் பாடல்களை அகப்பாடல்கள் என்று உரைக்கலாம்’’ என்று அகப்பாடல்களுக்கு விளக்கம் தரப்படுகிறது. இவ்வகத்துறைப்பாடல்களின் மூலம் காலம் காலமாக ஏற்றுக்கொள்ளப்படும் நெறிமுறைகளை எடுத்துக்கூறியும், சிலவற்றைத் தாம் கொண்ட நோக்கத்திற்காக சிறிது மாற்றியும், சில புதுநெறிகளை உருவாக்கியும் மாணிக்கவாசகர் தம் படைப்பில் அகப்பொருளின் வளர்ச்சிக்காக தன் ஆளுமையைப் பயன்படுத்தியுள்ளார்.

தலைவனைப் பிரிந்த தலைவி, தலைவனின் வருகையினை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருக்கிறாள். தன் தலைவனைக் காணும் காலத்தினை அறிய நிமித்திக்குறிகளின்

மூலம் கணிப்பாள் தலைவி. இம்மரபுச் செயலைச் சங்க இலக்கியம் முதலே பல இலக்கியங்களும் கூடலிழைத்தல், கூடல், ஆழி என்னும் சொற்களால் பதிவு செய்துள்ளன.

‘கூடலாவது வட்டமாகக் கோட்டைக் கீறி, அதற்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ் சுழித்து, இரண்டு சுழியாகக் கூட்டினால் இரட்டைப்பட்டால் கூடுகை என்றும், ஒற்றைப்பட்டால் கூடாமை என்றும் சந்தேகமாகக் கூறுவர் என்று பெரியவாச்சான் பிள்ளை கூறுவார்’’ என ம.சா. அறிவுடைநம்பி கூடலிடைத்தல் பற்றி எடுத்தியம்புகிறார். திருக்கோவையாருள் அகப்பொருள் துறைகளுள் ஒன்றாகக் கூடலிழைத்தலைக் கையாண்டுள்ளார்.

**‘ஆழி திருத்தும் புலியூர் உடையான் அருளின்அளித்து**
**ஆழிதிருத்தும் மணற்குன்றின் நீத்தகன்றார் வருகவென்று**
**ஆழிதிருத்திச் சுழிக்கணக்கு ஓதினமையால் ஐய**
**ஆழித்திருத்தித் தரக்கிற்றி யோஉள்ளம் வள்ளலையே’’**

**(திருக்கோவையார்,பா.186)**

என்னும் திருக்கோவையார் பாடலில், ஆழி என்ற சொல்லைக் கூடலிழைத்தல் என்ற பொருளில் கையாண்டுள்ளார். பெரிய வட்டமாக ஒரு கோடு போட்டு, அந்தக் கோட்டிலே சிறு சுழிகளைச்சுழித்து வந்து முடியும் போது இரட்டைப்படையில் வருகிறதா என்று பார்ப்பாள் தலைவி. அவ்வாறு வருமாயின் தலைவன் விரைவில் வருவான் என்றும் ஒற்றைப்படையில் வருமாயின் தலைவன் வரமாட்டான் என்று கணிக்கும் தலைவியின் நிலை கூறப்படுகிறது.

## நெல் தூவிப் பார்த்தல்

தலைமக்களின் களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கையாக மாறுவதற்கான பயணத்தில் ஒரு மைல் கல்லாக விளங்குவது அறத்தொரு நிற்றல் என்னும் துறையாகும். இம்முறையில் தோழிக்கூற்றாகவும், செவிலிக் கூற்றாகவும் கூற்றுகள் நிகழும். வேலனைக் கொண்டு வெறியாடச் செய்து கழங்கு பார்த்தலும், கட்டுவிச்சியை அழைத்துக் குறி கேட்லுமாகிய இரு செயல்களும் இத்துறையில் நடக்கும்.

**‘குயிலிதன் றேயென்ன லாஞ்சொல்லி கூறன்சிற் றம்பலத்தான்**
**இயலிதன் றேயென்ன லாகா இறைவிறற் சேய்கடவும்**
**மயிலிதன் றேகொடி வாரணங் காண்கவன் சூர்தடிந்த**
**அயிலிதன் றேயிதன் றேநெல்லிற் றோன்றும் அவன்வடிவே’’** **(மேலது,பா.285)**

என்னும் பாடலில் தலைவியின் நிலையை அறிய செவிலி கட்டுவிச்சியை அழைத்துக் குறிபார்க்கும் செயலை எடுத்துரைக்கிறார்.

## பிறை தொழுதல்

அக்காலத்து மக்களின் வணக்கத்திற்குரிய செயல்களில் பிறை தொழுதலும் ஒன்றாகும். கோவை நூல்களில் பிறை தொழுதல் என்னும் நிகழ்ச்சி கூறப்பெறும். திருக்கோவையாரில், தலைவியின் புணர்ச்சி நிலையினை அறிய எண்ணிய தோழி வானத்தில் தோன்றும் பிறைமதியைக் காட்டி இதனைத் தொழுவாயாக எனக் கூறுகிறாள்.

**‘செவ்வி னடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறைக்கே’’** **(மேலது,பா.285)**

என்னும் பாடல் வரியில் செவ்வான் அடைந்த பசுங்கதிர் என்று கூறுவதால் அந்திப்பொழுதில் பிறை தொழும் வழக்கம் இருந்தமையை அறியமுடிகிறது. மேலும் ‘தில்லை நின்றோன் சடை மேலது ஒத்து’ எனக் குறிப்பிடப்படுவதாலும், சிறுபிறை என்பதாலும் மூன்றாம் பிறைத் திங்களைத்தான் வணங்குவார்கள் என்பதும் தெரிகிறது’’ என்று பழ. முத்தப்பன் கூறுகிறார். இதன்மூலம் மூன்றாம் பிறைச் சந்திரனை வணங்கும் பழக்கத்தைப் பண்டைத் தமிழர்கள் கொண்டிருந்தனர் என்பது பெறப்படுகிறது.

## மரபு மாற்றம்

காலம்காலமாகச் சொல்லப்பட்டு வந்த மரபுகளில் இருந்து விலகாமல் அதே சமயம் கால, இடம் கருதி சிறு மாற்றங்களைச் செய்வது படைப்பாளரின் சிந்தனைச் செறிவினால்

நிகழ்வதாகும். மாணிக்கவாசகரும் மரபிலிருந்து விலகாமல் பக்தியுணர்வைத் தன் எண்ணத்தின் செம்மைக்கேற்ப மாற்றம் செய்திருப்பது சிறப்பிற்குரியதாகவும் சிந்தனைக்குரியதாகவும் அமைகிறது. தெய்வத்தாலோ, இயற்கையாகவோ தலைவியைக் கண்டு புணர்ந்த தலைவன் மீண்டும் தலைவியைக் காண பாங்கனை நாடுவதும், அவனால் கூடும் கூட்டமும் பாங்கற்கூட்டமாகும். இயற்கைப்புணர்ச்சியின் பின் தலைவன் தானே சென்று கூடுவது, பாங்கனாற் கூடுவது என இடந்தலைப்பாடு இருவகையில் நடைபெறும். பேராசிரியர், 'துணையின்றி நிகழும் களவு சிறப்புடைத்தாகலானும் பாங்கன் கழறும் என்று அஞ்சி அவனை முந்துறத் தலைவன் மறைந்தொழுகுமாதலின் தன்னாற் கூடும் இடந்தலைப்பாடு நிகழ்ந்த பின்பே பாங்கனைத் துணையாக வேண்டுவன்'' என்று கூறுகிறார். தொல்காப்பியர் இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியற்கூட்டம் என்ற முறையில் களவு நடைபெறும் என்கிறார்.மாணிக்கவாசகர் இயற்கைப்புணர்ச்சிக்குப் பின் பாங்கற்கூட்டத்தை அமைத்துள்ளார். இறையனார் களவியலுரையும் இவ்வமைப்பிலேயே காணப்படுகின்றது. காமப்புணர்ச்சியை அடுத்து நிகழும் இடந்தலைப்பாடு பெரும்பாலும் பாங்கற்கூட்டத்தினாலேயே நிகழும் என்னும் கருத்தினை உடையதால் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. விதித் துணையின்படி நிகழ்வது குறைவே என்பதால் தொல்காப்பியர் கருத்திலிருந்து சற்றே மாறி இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் பாங்கற்கூட்டம் நிகழும் என்னும் கருத்தை மாணிக்கவாசகர் பதிவுசெய்கிறார்.

களவு வாழ்வில் தலைவியைக் காண உதவி புரியும்படி தலைவன் தோழியிடம் குறையிரந்து நிற்க, தோழியும் அவன் கருத்திற்கு உடன்படுதல் மாங்கி மதியுடம்பாடு என்னும் திறையாகும். இம்மதியுடம்பாடு குறையுறவுணர்தல், முன்னுறவுணர்தல், இருவரும் உள்வழி அவன் வர உணர்தல் என்று மூன்று வகையாக அமைகிறது. மாணிக்கவாசகர் திருக்கோவையாரில் மதியுடம்படுத்தலைத் தனி அதிகாரமாகவும், இருவரும் உள்வழி அவன் வர உணர்தலை முன்னும், மற்றவை பின்னுமாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கற்புப் பிரிவுகளில் ஒன்றான பரத்தமைப் பிரிவினை இலக்கண நூல்களும், கோவை நூல்களும் முதல் பிரிவாக அமைத்திருக்க, திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் முதல் பிரிவாக ஓதல் பிரிவையும் கடைசியாகப் பரத்தையிற் பிரிவையும் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பாட்டுடைத்தலைவன் திருச்சிற்றம்பலவானாக இருக்கையில் பரத்தையிற் நிமித்தமாக பிரியும் தன்மை சிறப்பாக இருக்காது என்று இறுதியில் அமைத்திருக்கிறார் எனப் பொருள்கொள்ள ஏதுவாகிறது.

**'மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை'' (தொல்.மரபியல்,நூ.91)**

என்ற தொல்காப்பியரின் கூற்றிற்கேற்ப மரபுநிலையில் இருந்து திரியாது. சொல்லும் முறையில் சிறு மாற்றத்தை மட்டும் விதைத்து புதுமையை நோக்கி இட்டுச்செல்லும் மாணிக்கவாசகரின் பங்கு சிறப்பிற்குரியதாகும்.

**உருவாக்கம்**

இலக்கியம் படைப்பாளியின் உள்ளார்ந்த உணர்வு, வாழ்வியல் அனுபவங்களைக் கொண்டு படைக்கப்படுகிறது. 'மனித உள்ளத்தின் உணர்வே எல்லா அறிவியல்களுக்கும், கலைகளுக்கும் கருவறையாக விளங்குவது'' 105 என்னும் கூற்றிற்கேற்ப படைப்பாளனின் வெளிப்பாடு புதிய இலக்கிய வகைக்கு வித்திடுவதாக அமைகிறது. மாணிக்கவாசகரும் தம் படைப்பினில் பல புதிய கருத்துக்களை எடுத்துரைக்கிறார்.

**'விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே'' (தொல்.செய்யுளியல் நூ.237)**

என்னும் தொல்காப்பிய நூற்பா மூலம் புதியதாகி வரும் எல்லா இலக்கியங்களையும் விருந்தில் அடக்கலாம் என்றும், பிரபந்தங்கள் அனைத்தும் இதனுள் அடக்கலாம் என்பதும் தெளிவாகிறது. எட்டாம் திருமுறையின் வாயிலாக பல்வேறு இலக்கிய வடிவங்களுக்கு வித்திட்டவர் மாணிக்கவாசகர்.

மனமகிழ்ச்சிக்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் விளையாடும் மகளிரின் விளையாட்டுக்களை அடிநாதமாகக் கொண்டு அகப்பொருளை விளக்குகிறார். விளையாட்டு என்பது வெளித்தூண்டல்களில் இருந்து விடுபட்டு மகிழ்ச்சியூட்டும் செயலில் தன்னை ஈடுபடுத்துவதாகும். இவ்விளையாட்டு நிகழ்ச்சியினை இறைவனின் பெருமையையும், கருணையையும், திருவிளையாடல்களையும், அருளிச்செயல்களையும் பாடி மகிழும் ஓர் உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார். பக்தி இலக்கியத்தில் மகளிரின் விளையாட்டினை எடுத்தியம்பும் இக்கருத்தாக்கம் பக்தி இலக்கியத்திலும், அகப்பொருள் இலக்கியத்திலும் புதியதொரு வித்தினை இட்டுச்சென்றது என்பது புலனாகிறது.

**சுவை புதிது**

சங்க அகப்பாடல் துறையை மையமாக வைத்தே நாயன்மார்கள் பாடல்களில் அகத்துறைப் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. மாணிக்கவாசகரும் தம் கற்பனையின் புதுமையால் திருக்கோவையாரில் பல புதிய துறைகளைக் கையாண்டுள்ளார்.

கலைமான் வினாதல், பிறைதொழுக என்றல், ஏறுகோள் கூறி விரைவு கடாதல், புறவொடு புலத்தல், கண்டோரை வினாதல், மனமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தல், அவயவமெழுத அரிதென விலக்கல் போன்ற துறைகள் இதில் அடங்குவனவாகும்.

வரைபொருளுக்காகத் தலைவன் பிரிந்து செல்கிறான். பிரிந்து மீண்டுவரும் பொழுது வரைவிற்கான முயற்சிகள் நடக்கும். தலைவியைத் திருமணத்திற்காக பெண் கேட்க மணமுரசு ஒலிக்கச் செய்து செல்வர். திருமணத்திற்காக பேசும் போது தலைவனுடைய சுற்றத்தாரும், அறத்தில் சிறந்த சான்றோர்களும் கூடி இருந்து பெண்ணின் பெற்றோரிடம் பேசுவர். தலைவியின் சுற்றத்தாரும் தம் இல்லத்தை அழகுபடுத்துவார்கள். பூக்களால் தோரணம் கட்டித் தொங்கவிட்டு அழகுபடுத்துவார்கள் பொற்குடங்களும், ஐந்தலை விளக்குகளும் பிறவற்றையும் ஒருங்கே அமைத்து எதிர் முரசொலித்துத் தலைவனின் சுற்றத்தாரை வரவேற்பான். இதனை ஒரு துறைப் பொருளாகவே மாணிக்கவாசகர் கூறுகிறார்.

**‘பூரண பொற்குடம் வைக்க மணிமுத்தம் பொன்பொதிந்த**
**தோரண நீடுக - தூரியம் ஆர்க்கதொன் மாலயற்குங் காரணன்**
**ஏரணி கண்ணுத லோன்கடல் தில்லையன்ன வாரணவும்**
**முலை மன்றலென் றேங்கு மணமுரசே” (திருக்கோவையார்,பா.296)**

என்று திருக்கோவையாரின் பாடலில் மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தல் என்னும் துறை வந்துள்ளமை அறியமுடிகிறது. வந்தவர்கள் விரும்புமாறு வரவேற்று அவரவர்க்கு வேண்டும் இருக்கையும், சிற்றுண்டியும் கொடுத்து மகிழவர் என்னும் வழக்கத்தையும் அறியமுடிகிறது.

தலைவி மீது தலைவன் தீராக்காதலை உடையவன் என்பதை மாணிக்கவாசகர் பல பாடல்களில் எடுத்துரைக்கிறார். இருப்பினும் தலைவன் - தலைவி கற்பு வாழ்வில் மேம்பட்டு விளங்குவதைக் கண்டு வந்த செவிலி பேசுவதாக அமையும் ‘காதல் கட்டுரைத்தல்’ என்னும் துறை சிறப்பிற்குரியதான ஒன்றாகும்.

**‘பொட்டணியான் நுதல், போயிறும் பொய் போல் இடையெனப்பூண்**
**இட்டணி யான் தவிசின் மலரன்றி மிதிப்பக் கொடான்**
**மட்டணி வார் குழல் வையான் மலர் வண்டு உறுதல் அஞ்சிக்**
**கட்டணி வார் சடையோன் தில்லை போலி தன் காதலனே” (மேலது,பா.303)**

என்னும் பாடலில், தலைவியிடத்தில் காதல்கொண்ட தலைவன் அவள் இடைமுறியுமென்று எண்ணி அணிகலன்களை அணியத் தயங்குகிறான். மெல்லடி நோகும் என்று பனிமலரைத்தவிர வேறு எதனையும் படுக்கையில் விரிக்கமாட்டான். வண்டுகள் வந்து மொய்க்குமென்று எண்ணி அஞ்சிக்கூந்தலில் மலரை அணிய விரும்பமாட்டான் என்று செவிலி தலைவனின் அன்பினை எடுத்துக்கூற, முத்தாய்ப்பாக நெற்றியில் பொட்டணிந்தால் தாங்கமாட்டாள் என்று தலைவன் எண்ணுவதைத் திருக்கோவையாரில் மட்டும் காணமுடிகிறது.

அகப்பொருள் நூல்களில் மிகவும் குறுகிய நிலையில் இடம்பெறும் பாத்திரப்படைப்பு பாங்கனுடையதே ஆகும். தலைவனின் காதல் நோயை அறிந்த பாங்கன் தலைவனைப் பலவாறு கழறுகிறான். இருப்பினும் தலைவன் மேல் கொண்ட அன்பால் அவனுக்கு உடன்படாமலும் இருக்க முடியவில்லை. பாங்கனின் தயக்கத்தைக் கண்ட தலைவன் தன் விதியைத் தானே நொந்து கொள்கிறான். பாங்கனோ தலைவனின் தாழ்விற்கு தானே காரணமாகிய தன் விதியை எண்ணி நொந்து கொள்கிறான். இத்தகு செயல் திருக்கோவையாரில் மட்டுமே காணப்படுகிறது.

**‘ஆலத்தினால் அமிர்தாக்கிய கோன் தில்லை யம்பலம்போல்**
**கோலத்தினான் பொருட்டாக, அமிர்தங் குணங் கெடினுங்**
**காலத்தினால் மழை மாறினும் மாறாக் கவிகை நின்பொற்**
**சீலத்தை நீயும் நினையாது ஒழிவது என் தீவினையே’’ (மேலது,பா.27)**

என்னும் பாடலில் அமுதம் சுவை மாறினும், மழை பெய்யாது பொய்ப்பினும் தலைவன் மாறாத தன்மையுடையவன். இத்தகைய சிறப்புடைய தலைவன் பெண்மையின் மீது ஆசைகொள்ளுமாறு ஆகிவிட்டதே என்றும், அதற்குத் தானே காரணம் என்றும் வருந்துகிறான். நல்வழிப்படுத்த வேண்டிய தோழன் பெண்ணின் காரணமாக நலியுறும் நிலையில் இருக்க அதனைத் தடுத்துக் காக்காது வாழ்ந்து விட்டோமே என நொந்து கொள்ளும் திறன் மாணிக்கவாசகரின் படைப்பில் வெளியாகும் புதுமையாகும்.

**‘கதிர்த்த நகைமன்னும் சிற்றவ்வை மார்களைக் கண்பிழைபித்**
**தெதிர் தெங்கு நின்எப் பரிசளி த்தான்இமை யோர்இறைஞ்சும்’’ (மேலது,பா.396)**

என்னும் பாடலில் புதல்வனை வைத்து ஊடல் தீர்க்க எண்ணிய தலைவனிடமிருந்து, குழந்தையைப் பெற்று அணைத்து சிற்றன்னையிடம் சென்று வந்த தந்தைக்கு உன் எண்ணம் வந்த தன் காரணம் என்னவோ என்று தலைவி வினவுகிறாள். சிற்றன்னை என்று பரத்தமையைக் கூறி தலைவனைப் புலவியிலும் பெருமைப்படுத்தும் தலைவியின் பண்பு சிறப்பிற்குரியதாகும்.

**புராணக்கதைகள்**

பக்தி இலக்கியங்களின் அகச்சுவைப் பாடல்களை மேலும் சுவையூட்ட புராணச்செய்திகளைக் கருவியாக ஆழ்வார்களும், நாயன்மார்களும் எடுத்தாளுகின்றனர். இறைவனின் அருட்செயல்களையும், பெருமைகளையும், பேராற்றலையும் புலப்படுத்த புராணங்கள் தோன்றின. இப்புராணங்கள் பெரும்பாலும் இறைவனோடு தொடர்புடைய கதைகளாக அமைவதுண்டு. ‘ஒரு நாட்டின் அடிக்கருத்துக்கள், நாகரிகம், பண்பாடு, சமய நம்பிக்கைகள், ஆகியவற்றை நேரடியாகவும் குறியீட்டு முறையிலும் விளக்கவரும் ஓர் இலக்கிய உத்தியே புராணம்’’ என்று க.செல்வன் கூறுகிறார். மாணிக்கவாசகரும் தம் படைப்புகளில் அகப்பொருளை எடுத்துரைப்பதற்காகவும், அதன் சுவையை மெருகூட்டுவதற்காகவும் புராணக் கதைகளைக் கையாண்டுள்ளார். முப்புரம் எரித்தது, பாற்கடல் கடைந்தது, சிவபெருமானின் அடிமுடி தேடியது, தட்சனின் யாகத்தைப் பற்றிய தானப் புராணக்கதைகள் அதிகமாக கையாளப்பட்டுள்ளது.

தலைவனின் பிரிவை ஆற்றாத தலைவி தலைவனைப் பிரிந்து வாழ்வது ஒரு வாழ்வா?, தலைவனைப் பிரிந்தப் பின்னும் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறேனே? என் செய்வேன் என அழுது புலம்புகிறாள்.

**‘பொய்யனேன் அகம் நெகப் புகுந்து அமுது ஊறும்**
**புதுமலர்க் கழல் இணை அடி பிரிந்தும்**
**கையனேன் இன்னும் செத்திலேன் அந்தோ**
**விழித்திருந்து உள்ள கருத்தினை இழந்தேன்**
**ஐயனே அரசே அருள்பெரும் கடலே**

**அத்தனே அயன்மாற்கு அறி ஒண்ணாச்**
**செய்ய மேனியனே செய்வகை அறியேன்**
**திருப்பெருந்துறை மேவிய சிவனே'' (திருவாசகம்,செத்திலாப்பத்து,பா.1)**

என்று தலைவி கூறுவதின் மூலம் தலைவனின் பிரிவு சாவினைவிடக் கொடுமையானது என்பதைப் புலப்படுத்தும்விதமாக அமைவதை உணரமுடிகிறது. மன உணர்வு என்பது ஆடவர்க்கும், பெண்டிர்க்கும் பொதுவானது. இதனைப் புலப்படுத்தும்வண்ணம்,

**'வேனில் வேள் கணை கிழித்திட மதி சுடும்**
**அது தனை நினையாதே**
**மான் நிலாவிய நோக்கியர் படிறிடை**
**மத்து இடு தயிர் ஆகி**
**தேன் நிலாவிய திரு அருள் புரிந்த**
**என்சிவன் நகர் புகப் போவேன்**
**உளனில் ஆவியை ஓம்புதல் பொருட்டு**
**இனும் உண்டு உடுத்து இருந்தேனே'' (மேலது,திருச்சதகம்,பா.40)**

என்னும் பாடல் காமனை இழிக்கும்படியாகத் தலைவன்மீது கொண்ட தலைவியின் காதல் வேட்கையைப் புலப்படுத்துகிறது. இவ்வாறாகத் தலைவனின் பெருமைகளையும், சிறப்புகளையும், தோற்றத்தையும், வீரத்தையும் எடுத்துக்கூறுவதற்குப் புராணக் கதைகளை உத்தியாக மாணிக்கவாசகர் கையாண்டுள்ளார்.

## மெய்ப்பாடு

மெய்ப்பாடு என்பதற்கு 'வெளிப்பாடு' என்பது பொருளாகும். சுவை என்றாலும் மெய்ப்பாடு என்றாலும் ஒன்றேயாகும். சுவையுணர்ச்சியே விருப்பு, வெறுப்புகளைத் தந்து மெய்க்குறிகளுடன் வெளிப்படுவதாதலின் சுவைக்கு மெய்ப்பாடு என்னும் பெயராயிற்று எனலாம்.

நாவாகிய பொறிகளினால் அறியப் பெறும் இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு என்கின்ற சுவைகள் போன்று கண்ணினும் செவியினும் அறியப்பெறும் சுவைகள் எட்டாகும். இவைகளைத் தொல்காப்பியர் 'மெய்ப்பாடு' என்பார். எட்டு மெய்ப்பாடுகளையும்,

**'நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப'' (தொல்.மெய்ப்பாட்டியல்.நூ.13)**

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். எண்வகை மெய்ப்பாடுகளில் முதலாவாக அமைவது 'நகை' யாகும். மாணிக்கவாசகர் தம் படைப்புகளில் நகைச்சுவையை அழகுபட பயன்படுத்தி உள்ளார்.

திருவெம்பாவையில், விடியற்காலையில் எழுந்த மகளிர், எழாமல் தூங்கிக்கொண்டிருக்கும் தலைவியைப் பார்த்து,

**'ஒள்நித் திலநகையாய் இன்னும் புலர்ந்தின்றோ'' (திருவாசகம்,திருவெம்பாவை,பா.14)**

என்றும், வேறொருத்தியை,

**'மானே நீ நென்னலை நாளைவந் துங்களை**
**நானே எழுப்புவன் என்றலும் நாணாமே**
**போன திசைபகராய் இன்னும் புலர்ந்தின்றோ'' (மேலது,பா.6)**

என்று வினவுதலும் எள்ளலாகிய நகைப்பை எடுத்தியம்புவதாக அமைகிறது. தலைவனோடு புணர்ந்து வரும் தலைவியிடம் தோழி வினவ, தலைவி நான் சுனையில் நீராடி வருகிறேன் எனக் கூறுகிறாள். தலைவியின் புணர்ச்சியை அறிந்த தோழி, புணர்ச்சியால் ஏற்பட்ட மெய் வேறுபாட்டினை எடுத்துக்காட்டி இவையெல்லாம் சுனையில் நீராடியதால்தான் வந்ததோ என எள்ளி நகையாடும் தன்மையில் அந்நிகழ்ச்சியைக் கண்முன்னே காட்சிப்படுத்துகிறார் மாணிக்கவாசகர்.

**'கருங்கண் சிவப்பக் கனிவாய் விளர்ப்பக்கண் ணாரளிபின்**
**வருங்கண் மலைமலர் சூட்டவற் றோமற்றவ் வான்சுனையே''** **(திருக்கோவையார்,பா.170)**

என்னும் பாடலின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

**உவகை**

மகிழ்ச்சியை ஏற்படுத்துவது உவகையாகும். 'காமம் முதலிய மகிழ்ச்சி'' உவகை என்று கூறுவார் ந.சுப்புரெட்டியார். மாணிக்கவாசகர் உலகத்தாரிடையே காணப்படும் உண்மையான காமச்சுவையை,

**'...சோரனேன் அங்கு ஒருத்திவாய்**
**அடித்த வானும் துகில் இறையே**
**சோர்ந்த வாறும் முகம் குறுவேர்**
**பொடித்த வாறும்''** **(திருவாசகம், திருச்சதகம்,பா.57)**

என்னும் திருவாசகப் பாடலில் புலப்படுத்துகிறார். உவகைச் சுவையில் விளையாட்டால் வரும் உவகை ஒரு பகுதியாக உள்ளது. திருவாசகத்தில் திருவெம்பாவை, திருவம்மானை, திருத்தெள்ளேனம், திருச்சாழல், திருப்பூவல்லி போன்ற விளையாட்டுகள் உவகைச் சுவையைத் தருவதாக அமைந்துள்ளன. திருப்பொற்சுண்ணம் முழுமையாக உவகைச் சுவையைப் புலப்படுத்தும்விதத்தில் அமைந்துள்ளது.

இவ்வாறாக மாணிக்கவாசகர் தம் படைப்புகளில் அகப்பொருள் மரபினை எடுத்துரைக்கவும், உணர்ந்து கொள்ளவும் மெய்ப்பாட்டினை ஓர் உத்தியாகக் கையாண்டுள்ள விதத்தை அறியமுடிகிறது.

**அணிநலன்**

செய்யுளுக்கு அழகு தருவன அணிகளே. அணிகளைப் பயன்படுத்துவதால் படைப்பாளன் தான் கூற விரும்பும் கருத்தினைச் சுருக்கமாகவும், செறிவாகவும், சுவையாகவும் கூறமுடிகிறது. படைப்பாளனின் காலச்சூழல், பண்பாடு, உணர்வுதிறன் ஆகியவற்றை வெளிப்படுத்தியும் நிற்கிறது. படைக்கும் இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைநிற்பதாகவுமாகிறது. மாணிக்கவாசகர் தம் படைப்புகளில் அணிநலன்களைப் பயன்படுத்தியுள்ளார். அதில் முதன்மையானது உவமை நலமாகும்.

ஒரு பொருளுக்கு உவமை கூறும்பொழுது அப்பொருளின் பண்பினை மட்டும் உணர்த்தினால் போதாது. தன்னியல்பால் உயர்ந்து உவமையாகும். பொருளுக்கு உயர்வினைத் தரும்விதமாகவும் இருக்கவேண்டும். தலைவனை எண்ணி வருந்தும் தலைவி, நிலையின்றி அலையும் தமது உள்ளத்திற்குப் பாவிடை ஆடு குழலைக் கூறியுள்ளது தனித்ததோர் உவமையாகும்.

**'பாவிடை ஆடுகுழல் போற் கரந்து**
**பரந்து உள்ளம்''** **(திருவாசகம்,அடைக்கலபத்து,பா.8)**

என்னும் பாடலில் ஆடை நெய்வதற்கும் பயன்படும் கருவியின் முக்கியப்பகுதி குழல் பகுதியாகும். அது ஓரிடத்தில் நில்லாமல் வலமும் இடமுமாகச் செல்வதுபோல் மனதும் அங்குமிங்கும் அலைபாய்வதாய் உவமை கூறிய மாணிக்கவாசகரின் கற்பனைத்திறன் சிறப்பிற்குரியதாகும்.

**பழமொழி**

மனிதனின் அனுபவப் பிழிவாக பிறப்பது பழமொழியாகும். மக்களுக்குப் பயனுள்ள கருத்தை முன்னோர்கள் வழங்கிச் சென்றதே பழமொழியாகும். இம்மொழி முதுமொழி என்றும் அழைக்கப்படுகிறது. மாணிக்கவாசகரும் நுண்ணிய கருத்துகளை எளிய பழமொழியின் வாயிலாகப் புலப்படுத்துகிறார்.

கூடி இன்பம் துய்த்த தலைமக்களுள், நிலைபேறுடைய பெரிய செல்வத்தைத் தேடுவதற்காகத் தலைவன் பிரிவதைத் தோழி 'வறியார் இருமையின்பம் அறியார்'' என்னும் பழமொழியின் தன்மையுணர்ந்து தலைவியிடம் எடுத்துரைக்கிறாள்.

**'வறியார் இருமை யறியார் எனமன்னு மாநிதிக்கு**
**நெறியா ரருஞ்சுரஞ் செல்லுலுற் றார்நமர் நீண்டிருவர்'' (திருக்கோவையார்,பா.333)**

என்ற பாடல் இவ்வுலகில் வாழ்வதற்குப் பொருள் இல்லை என்றால் இன்பம் அனுபவிக்கமுடியாது என்பதால் தலைவன் பொருளீட்டச் செல்கிறான் என்று கூறுகிறான். இதனை,

**'அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு'' (திருக்குறள்,குறள்.247)**

என்னும் குறளின் கருத்தினை மாணிக்கவாசகர் கையாண்டுள்ளமையை அறியமுடிகிறது. இது போன்ற பல்வேறு உத்திகளைக் கையாண்டு திருக்கோவையார் என்னும் அகப்பொருள் கோவையைப் படைத்து அகப்பொருள் மரபினை மாணிக்கவாசகர் வளர்ச்சியடையச் செய்துள்ளார்.

**துணைநூற்பட்டியல்**

1. இளம்பூரணர் (உ.ஆ) ,தொல்காப்பியம்,பொருளதிகாரம்,சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,சென்னை,1969.
2. சுப்பிரமணியப்பிள்ளை.கா,(உ.ஆ),திருவாசகம், தமிழ் நிலையம்,சென்னை,2008.
3. தண்டபாணி தேசிகர்.ச,(உ.ஆ), திருக்கோவையார்,சாரதா பதிப்பகம், சென்னை, 2011.
4. மாணிக்கம்.வ.சுப,தமிழ்க்காதல், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை,2009.
5. மாதையன்.பெ, அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை 2009.
6. முத்தப்பன்.பழ, திருமுறைகளில் அகக்கோட்பாடு, மீனாட்சி பதிப்பகம், மயிலம்.